**<u>முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்</u>**
**<u>O.S. No. 516/2023</u>**

**<u>Witness DW 1</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பொன்னுசாமி | தொழில் | |
| த/பெ | சக்கரவர்த்தி | வயது | |
| ஊர் | | தேதி | 05.03.2026 |
| மாவட்டம்; | | | |

இன்று (05.03.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

**<u>சத்தியமாக சொல்கிறேன்</u>**

எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். வாதியுடன் விற்கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு முன்பு நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வேறு கிரையம் தொடர்பாக சென்றுள்ளேன் என்று சொன்னால் இல்லை. நானும் எனது சகோதரரும் சேர்ந்து காளிதாஸ் என்பவருக்கு எங்களது சொத்தினை கிரையம் செய்துள்ளோம் என்றால் சரி. அப்போது நான் சார் பதிவாளர் அலுவலகம் சென்றேன் என்றால் சரி. நான் வாதியுடன் சேர்ந்து 2021 ம் வருடம் சார் பதிவாளர் அலுவலகம் சென்று கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளேன் என்று சொன்னால் சரி ஆனால் கடனுக்காக தான் ஒப்பந்தம் ஏற்படுத்தினோம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 தான் அந்தகிரைய ஒப்பந்தம் என்றால் சரி. கிரைய ஒப்பந்தத்திற்கு பின்பு இவ்வழக்கின் வாதியின் கணவரை அழைத்து சென்று எனக்கு சொந்தமான நிலத்தை காண்பித்து தனிப்பட்ட முறையில் வேறு ஒரு கிரையம் செய்வதாக கூறி பணம் பெற்றேன்என்றுசொன்னால் இல்லை. பிராமண வாக்குமூலத்தில் நிலத்தின் மதிப்பு தொடர்பாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. அதனை நிருபணம் செய்யும்பொருட்டுஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வட்டி செலுத்தியதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்று சொன்னால் இல்லை ஆனால் வட்டி கொடுத்துள்ளேன். இவ்வழக்கில் உள்ள வாதியுடன் ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு முன்பு வாதியின் மாமனாரான குமார் என்பவரை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்று சொன்னால் 2 வருடங்களாக

தெரியும். நான் செங்கல் சூலை வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரி. எனது வியாபாரத்தின் வாயிலாக வாதியின்மாமனாரிடம் தனிப்பட்ட முறையில் கொடுக்கல் வாங்கல் உள்ளதா என்றால் உள்ளது. வழக்கு சொத்தை பொறுத்து கிரையம் பேசி தான் கிரைய முன் பணமும் நான் பெற்றேன் என்றுசொன்னால் இல்லை. நான் கிரைய முன் பணமாக பணத்தை பெற்று அதன் பேரில் கிரைய ஒப்பந்தத்தை பதிவு செய்து கொண்டேன் என்று சொன்னால் கடனுக்காக பெற்ற பணத்தை அவர்களாகவே அடித்து கொண்டு வந்துவிட்டனர். நான் சார் பதிவாளர் அலுவலகத்தில் தான் கையெழுத்து போட்டேனா என்றால் நான் கையெழுத்து போட்டுள்ளேன் அது கடனுக்காக தான் செய்தேன். கடனுக்காக கையொப்பம் செய்தேன் என்பதை சார்பதிவாளர்அலுவலரிடம் கூறினேன் என்றால் கூறினேன். வாதியானவர் மீதி தொகையை பெற்றுக்கொண்டு நான்கிரையம் செய்து கொடுக்க முன் வராத காரணத்தினால் அவரது வழக்கறிஞர் வாயிலாக ஒரு அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார் நான் நேரில் வந்த பேசி கொள்வதாக கூறினேன். பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரி. நான் வழக்குவாதியிடம் கிரையம் கொடுப்பதாக கூறி தான் பணம் பெற்றேன் என்றாலும் தற்போது வாதியை ஏமாற்றும் நோக்கில் அதிகபடியான பணம் கொடுத்தால் தான் கிரையம் செய்து கொடுக்கவருவேன் என்று மிரட்டி ஏமாற்றி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கடனுக்காக பணம் பெறவில்லை என்றாலும் கடனுக்காக தான் பணம் பெற்றேன் என சார்பதிவாளரிடம் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு சார்பதிவாளரிடம் கடனுக்காக தான் இந்த கிரைய ஒப்பந்தத்தை வாதிக்கு எழுதிகொடுத்தேன் என்ற விவரத்தை கூறியிருந்தால் சார்பதிவாளர் ஆவணத்தை ரத்து செய்திருப்பார் என்றுசொன்னால் சரியல்ல. வாதி தாக்கல் செய்த படி தாவா படி நான் ஏற்படுத்திகொண்ட கிரைய ஒப்பந்தத்தின் பேரில் கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/–M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram